செ.வெ.எண்.77 நாள்.09.02.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப்–4 தேர்வு நடத்துதல் முன்னேற்பாடுகள் தொடர்பாக கண்காணிப்பு அலுவலர்கள், பறக்கும்படை அலுவலர்கள் மற்றும் முதன்மை தேர்வு கண்காணிப்பாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப்–4 தேர்வு நடத்துதல் முன்னேற்பாடுகள் தொடர்பாக கண்காணிப்பு அலுவலர்கள், பறக்கும்படை அலுவலர்கள் மற்றும் முதன்மை தேர்வு கண்காணிப்பாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.02.2018) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 11.02.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று முற்பகல் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு -4 (Group -IV)-ல் அடங்கிய பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வுகள், திருநெல்வேலி மாவட்டத்தில் 1) திருநெல்வேலி, 2) ஆலங்குளம் 3) அம்பாசமுத்திரம், 4) நாங்குநேரி 5) பாளையங்கோட்டை 6)இராதாபுரம் 7)சங்கரன்கோவில் 8)செங்கோட்டை 9) சிவகிரி 10) தென்காசி, 11) வள்ளியூர் 12) வீரகேரளம்புதூர் 13) சேரன்மகாதேவி 14) கடையநல்லூர் 15)மானூர் 16) திருவேங்கடம் ஆகிய 16 தேர்வு மையங்களில், 322 கல்வி நிலையங்களில் (371 Halls) நடைபெறவுள்ளது. மேற்படி தேர்வினை 1,03,629 நபர்கள் எழுத உள்ளார்கள். இத்தேர்வினை கண்காணிக்க துணை ஆட்சியர் நிலையில் 23 பறக்கும்படை அலுவலர்களும், வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் நிலையில் 63 சுற்றுக்குழு அலுவலர்களும், உதவியாளர் நிலையில் 371 ஆய்வுப்பணி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக்கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்வு நடைபெறும் கல்வி நிலையங்களுக்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தேர்வு எழுதுவோர் தங்களின் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு சிறப்பாக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ப.ஆகாஷ்,இ.ஆ.ப., கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், தமிழ்நாடு தேர்வாணைய பிரிவு அலுவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், உதவி பிரிவு அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.